OS: 68/2018

Date:05.09.2023

பெயர் : கலா

**பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-** வாதிகள் தரப்பில்

வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவாவை அனைத்தும் படித்து பார்த்துள்ளேனா என்றால் அதை நான் படிக்கவில்லை. M.S. பிரகாசம், ராமமூர்த்தி என்பவருக்கு ஒரு பொது அதிகார பத்திரம் அளித்துள்ளார். அந்த ஆவணத்தை நகல் எடுத்து படித்து பார்த்தேனா என்றால் இல்லை. M.S. பிரகாசம், ஜெயகுமார் ஆகிய இருவரும் சேர்ந்து 2 ம் பிரதிவாதி அம்சாவிற்கு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள் அதை படித்த பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். பொது அதிகார பத்திரத்தினுடைய அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்றால் 2 ம் பிரதிவாதியிடம் உள்ளது. அந்த பொது அதிகார பத்திரத்தின் நகலை எனது தரப்பில் நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேனா என்றால் எனக்கு தெரியவில்லை. பொது அதிகார பத்திரத்தினுடைய மாதம், வருடம், தேதி தெரியுமா என்றால் வருடம் 2008 ம் வருடம் தெரியும், தேதி, மாதம் எனக்கு நினைவில் இல்லை.

மேற்படி பொது அதிகார பத்திரம் 2008 ம் ஆண்டு 2 ம் பிரதிவாதிக்கு M.S. பிரகாசம், ஜெயகுமாரும் எழுதிகொடுத்தது பற்றி எனது வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பொது அதிகார பத்திரத்தில் எவ்வளவு விஸ்தீரனமும், எந்த சர்வே எண்ணிற்கு 2 ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டது என்றால் சர்வே எண்.171/1, விஸ்தீரனம் எனக்கு சரியாக தெரியவில்லை. தாவா சொத்துக்களை பொருத்து 2 ம் பிரதிவாதிக்கு பவர் பத்திரத்தில் எதுவும் எழுதிகொடுக்கவில்லை என்று சொன்னால் பவர் பத்திரம் 2 ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்திருக்கிறார்கள். தாவா சொத்திற்கு உண்மையான உரிமையாளர் யார் என்றால் M.S. பிரகாசத்தின் சகோதரர் தியாகராஜன். மேற்படி தியாகராஜன் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். M.S. பிரகாசமும் காலமாகிவிட்டார் என்றால் சரிதான்.

தாவா சொத்து M.S. பிரகாசத்திற்குதான் பாத்தியப்பட்ட சொத்து அவர் ராமமூர்த்தி என்பவருக்கு 16.04.2010 ம் தேதியில் ஒரு பொது அதிகார பத்திரம் எழுதிகொடுத்துள்ளார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு

செக்குபந்தி தெரியுமா என்றால் தெரியும், தற்போது காலிமனையாகத்தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்தினை பொருத்து பவர் பத்திரம் பெற்றுள்ள ராமமூர்த்தி, சக்திவேல் என்பவருக்கு சொத்தினை கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. மேற்படி சக்திவேல் சொத்தினை கிரயத்திற்கு பின்பு வருவாய் துறையினர் மூலம் உட்பிரிவு செய்து சர்வே எண்.171/3 என்ற எண்ணில் தனிபிரிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. தாவா சொத்தானது ஆரம்பத்தில் தியாகராஜனும், M.S. பிரகாசம் பெயரில் இருந்து வந்தது என்றால் கூட்டாக இருந்தது. தாவா சொத்தின் சர்வே எண்.171/1B, 171/1A என உட்பிரிவு செய்யப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். எனக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது இந்த எண்ணில்தான் கொடுத்துள்ளார்கள்.

தாவா சொத்து சம்மந்தமாக ராமமூர்த்தி பவர் பத்திரம் பெற்று அதற்கு பின்பு சக்திவேல் அவரிடம் இருந்து கிரயம் பெற்று அதற்கு பின்பு இந்த வாதிகள் சக்திவேலிடம் இருந்து கிரயம் பெற்றுள்ளார்கள். அந்த பத்திரங்களை எடுத்து பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. வாதிகள் 20.07.2011 தேதியில் கிரயம் வாங்கிய பத்திரத்தை எடுத்து பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. வாதிகள் மேற்படி கிரயம் வாங்கியதை பற்றி தாவாவில் குறிப்பிட்டுள்ளார்கள் அந்த விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடந்தது என்றால் சரிதான் அந்த வழக்கின் எண் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேட்டுரில் நடந்து வந்த வழக்கினை 2 ம் பிரதிவாதி பார்த்து கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. நான்தான் பார்த்துகொண்டேன். மேற்படி தாவாவில் யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் ஜெயகுமார், அம்சா, M.S.பிரகாசம், முருகானந்தம் ஆகியோர்கள் மீது வழக்கு தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் நால்வரும் ஆஜராகாமல் நான் ஒரு கட்சி உத்தரவு பெற்றேன் என்றால் அவர்கள் நீதிமன்றத்திற்கு வந்தார்களா, இல்லையா என்று எனக்கு தெரியாது.

யார் யார் வழக்கில் வழக்கறிஞர் வைத்து ஆஜர் ஆகி வழக்கு நடத்தினார்கள் என்றால் ஒருமுறை ஜெயகுமார் வந்தார். அதற்கு பின்பு வழக்கில் ஜெயகுமார் என்ன செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் கிரய ஒப்பந்தம் யாரிடம் செய்துகொண்டேன் என்றால் 2 ம் பிரதிவாதியிடம் செய்து கொண்டேன். கிரய ஒப்பந்தம் எவ்வளவு தொகைக்கு செய்து கொண்டேன் என்றால் ரூ.4,00,000/- க்கு செய்துகொண்டேன். எந்த பிளாட் எண் என்றால் 2 ம் நம்பர் பிளாட்டிற்கு செய்துகொண்டேன். ஒரு சதுரடிக்கு எவ்வளவு தொகை

பேசப்பட்டது என்று சொன்னால் மொத்தமாக ரூ.4,00,000/- க்கு பேசப்பட்டது. எனக்கும், 2 ம் பிரதிவாதிக்கும், மற்றவர்களுக்கும் இடையே நடந்த வழக்கில் இந்த தாவா வாதிகள் தரப்பினர்களாக இருக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் பெற்ற தீர்ப்பின் அடிப்படையில் அதனை நிறைவேற்றகோரி நிறைவேற்று மனு தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். அந்த நிறைவேற்று மனுவின் எண் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. M.S. பிரகாசம், ஜெயகுமார் இருவரும் சேர்ந்து 2 ம் பிரதிவாதிக்கு அளித்திருந்த பொது அதிகார பத்திரத்தினை 13.04.2010 தேதியில் ரத்து செய்துவிட்டார்கள் என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

கிரய ஒப்பந்த ஆவணத்தில் கிரய ஒப்பந்த காலம் எவ்வளவு நாட்கள் போடப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு சரியாக நினைவில் இல்லை. நான் கிரய ஒப்பந்த பத்திரம் 2 ம் பிரதிவாதியுடன் போட்டுக்கொண்டது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்தினை நீதிமன்றத்தின்மூலம் கிரயம் செய்த பின்னிட்டு கடந்த 8 ஆண்டுகளாக சுவாதீனம் எடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிகள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுத்ததாக சொல்லியுள்ளேன் பொய்யாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமலேயே குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/-DW1
ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.